# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.28/2025

Deposition of Lw1 examined as Pw1 Dt. 03.03.2026

| | |
|---|---|
| Name | திரு.மதன்குமார் |
| Father's Name | ஏகாம்பரம் |
| Village | கடலூர் |
| Age | 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.03.26

( Accused absent.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2024 ம் ஆண்டு மயிலாடுதுறை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி புரிந்து வந்தேன். அப்போது 29.09.2024 ம் தேதி காலை 10.00 மணி அளவில் நானும், உதவி ஆய்வாளர் பிரியங்கா மற்றும் காவலர் அஜய் ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு சென்று கொண்டிருந்தபோது மயிலாடுதுறை சித்தர்காடு அரசு மதுபானக் கடை அருகே சென்றபோது எங்களை கண்டவுடன் ஒரு நபர் கையில் பாலித்தீன் கவருடன் உட்கார்ந்திருந்தவர் எங்களை கண்டவுடன்ஓட எத்தனித்தவரை நாங்கள் வளைத்து பிடித்தோம். அவர் வைத்திருந்த பாலித்தீன் பையை சோதனை செய்தபோது சுமார் 180 ML அளவு பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயம் இருந்தது. மேற்படி நபரை விசாரிக்க அவருடைய பெயர் ராஜேஷ் என்றும் அவர் தெற்கு தெரு மூவலூரைச் சேர்ந்தவர் என்றும், அவர் மேற்படி சாராயத்தை விற்பதற்கு எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லை என்று கூறினார், அவரை உதவி ஆய்வாளர் 10.05 மணிக்கு கைது செய்தார், அவர் கையில் வைத்திருந்த தடயப்பொருளான் 180 ML அளவு பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயத்தை கைப்பற்றுதல் மகசர் வாயிலாக என் முன்னிலையிலும் காவலர் அஜய் முன்னிலையிலும் கைப்பற்றினார். கைப்பற்றிய தடயப்பொருட்களை உதவி ஆய்வாளரின் உத்தரவுப்படி கொட்டி அழித்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் உள்ள சாட்சி கையெழுத்துகளில் முதலாவத கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் எதிரியை உதவி ஆய்வாளர் கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது குற்ற எண் 502/2024, 4(1) (c) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். பின்னர் எதிரியை தக்க பிணையில் காவல்நிலைய பிணையில் விடுவித்தார். உதவி ஆய்வாளர் என்னை 29.09.2024 ம் தேதி அன்று விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவ இடமானது ஜனங்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரியல்ல. மதுவிலக்கு சம்பந்தமாக தனித்தனி வாகனங்களில் சென்றிருந்தோமா என்றால்

சரிதான். தனிநபர்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மீண்டும் எதிரியுடன் காவல் நிலையத்திற்கு காலை 11.00 மணிக்கு வந்து விட்டோம் என்றால் சரிதான். அதன் பின்பு அழிப்பு மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் காலை 10.10 மணிக்கு தயார் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் காவல்நிலையத்தில் வைத்து செய்யப்பட்டது. கைப்பற்றுதல் செய்த தடயப்பொருளான காலி பாட்டில்களை நீதிமன்றத்தில் தடயப்பொருளாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்த எந்த வித தடயப்பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக ஆய்வாளர் பதிவு செய்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.